மாண்புமிகு திரு. சே. ரகுபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தோட்டத் தொழிலாளர்களுக்கு குறைந்த பட்ச ஊதியம் நிர்ணயிக்கிறபோது, தினசரி அடிப்படையிலே—தான் நாம் இதுவரை நிர்ணயம் செய்திருக்கிறோம். இந்த ஒப்பந்தங்கள் பொருந்தாத, ஏற்படுத்தப்படாத தொழில் அதிபர்கள் அந்தக் குறைந்த பட்ச ஊதியத்தை இன்றைக்கு அமுல் படுத்திக் கொண்டிருக்கிறார்கள். எனவே, எதிர்காலத்திலே இதுபோன்ற ஒப்பந்தங்கள் ஏற்படுகிறபோது, தொழில் அதிபர்கள், தொழிற்சங்கங்களுக்கிடையே இதுகுறித்து ஒரு சுமுகமான உடன்பாடு கொண்டு வருவதற்கு புரட்சித் தலைவி அரசு முடிந்த வரை, இயன்றவரை, முயற்சிக்கும், பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 438, திரு. து. மூர்த்தி, மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர்.

438—

திருவெண்காடு உயர்நிலைப்பள்ளிக்கு ஆதிதிராவிட நல விடுதி அமைத்தல்

*10990—திரு. து. மூர்த்தி:

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க் காணும் வினாவுக்கு விடையளிப்பாரா:—

சீர்காழி தொகுதி, திருவெண்காடு உயர்நிலைப்பள்ளிக்கு ஆதிதிராவிட நல விடுதி அமைத்துக் கொடுக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சீர்காழி தொகுதி திருவெண்காடு உயர்நிலைப் பள்ளிக்கு ஆதிதிராவிட நல விடுதி அமைத்துக் கொடுப்பது பற்றிய திட்டமேதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

திரு. து. மூர்த்தி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாகை காயிதே மில்லத் மாவட்டம், சீர்காழி தொகுதியில் திருவெண்காடு உயர்நிலைப்பள்ளியில் சுமார் 1,600-க்கு மேற்பட்ட மாணவர்கள் படித்து வருகிறார்கள். இதில் தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்கள் அதிகமாக படித்து வருகிறார்கள். மேலும், பெரும்பாலோர் ஆதிதிராவிட மாணவர்கள் கிராமப் பகுதியிலிருந்து தினந்தோறும் நடந்து வந்து படிக்கின்ற சூழ்நிலையில் இருக்கிறார்கள். இதனால் படிக்க முடியாத சூழ்நிலையில் மிகவும் சிரமப்படுகிறார்கள். எனவே ஆதிதிராவிட மாணவர்களின் கல்வியின் நலனைக் கருதி அந்த மாணவர்கள்

சிறப்பான முறையில் படிப்பதற்கு திருவெண்காடு உயர்நிலைப் பள்ளியில் படிக்கின்ற ஆதிதிராவிட மாணவர்களுக்காக, ஆதி திராவிடர் மாணவர்கள் நலனில் அக்கறை கொண்டு செயல்படும் தமிழகத்தினுடைய காவல் தெய்வம், எங்களுடைய இதய தெய் வம், டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய அரசால், இந்த ஆதிதிராவிட மாணவர்களுக்கு என்று மாணவர் விடுதி திறப்ப தற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வாரா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரும் நிதியாண்டில் பரிசீலிக்கப்படும் என் பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 439, திரு.எம். ஆண்டி அம்பலம் இருக்கையில் இல்லை, அவருக்குப் பதிலாக திரு. கே. எஸ். துரைமுருகன் கேட்கிறார். மாண்புமிகு பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத் துறை அமைச்சர்.

439—

ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். தேர்வு பயிற்சியின்போது மிகப் பிற்பட் டோருக்கு அளிக்கப்படும் உதவித் தொகை.

*11219— திரு. எம். ஆண்டி அம்பலம் :

மாண்புமிகு பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். தேர்வுகளுக்கான பயிற்சிப் பெறும்போது மிகப்பிற்படுத்தப்பட்ட இனத்தவருக்கு அளிக்கப் படும் அரசு உதவித் தொகை ரூ. 250—ஐ மேலும் உயர்த்தித்தர வேண்டுமென அரசுக்குக் கோரிக்கை வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார், பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

முற்பகல் 11-05

திரு. கே. எஸ். துரைமுருகன் : பேரவைத் தலைவர் அவர் களே, இன்றைய சூழ்நிலையில் "ஆல் இண்டியா சர்வீஸஸ்" என்று சொல்லக்கூடிய அகில இந்தியப் பணிகளில் தமிழகத்தி